V.—ADOPTION OF THE REPORT OF THE COMMITTEE OF PRIVILEGES *RE* THE DEFINITION OF THE TERM "PRECINCTS OF THE HOUSE".

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, I move—

"That the Report of the Committee of Privileges regarding the definition of the term 'Precincts of the House', laid on the Table on 31st March 1958, be approved."

MR. SPEAKER : Motion moved—

"That the Report of the Committee of Privileges regarding the definition of the term 'Precincts of the House', laid on the Table on 31st March 1958, be approved."

SRI M. KALYANASUNDARAM : இதில் ஒரு யோசனை மட்டும் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த ரிபோர்ட் நல்ல முறையில் அமைந்திருக்கிறது என்பதில் யாதொரு ஆட்சேபணையும் இல்லை. இந்த செக்ரிடேரியட் கட்டிடத்தில் ஒவ்வொரு பகுதியும் குறிப்பிட்டிருக்கிறபொழுது எதிர் கட்சித் தலைவர் அறையை குறிப்பிடவில்லை. சட்ட மன்றம், கமிட்டிகள் அறை, காண்டீன் என்று குறிப்பிட்டிக்கிறபொழுது எதிர் கட்சித் தலைவர் அறையும் சேர்க்கும் முறையில் இதை திருத்த வேண்டும். இதற்காக அதிகாரம் சபாநாயகரிடத்தில் இருக்கிறது.

சட்ட சபை கூடும்போது அங்கத்தினர்கள் இருக்கக்கூடிய அறையை இதில் சேர்க்கவேண்டும். சபாநாயகருக்கு அதிகாரம் இருப்பதால், இவைகளை சேர்த்துக் கொள்ளலாம் என்று சொல்லிக்கொண்டு இதை நான் வரவேற்கிறேன்.

MR. SPEAKER : The hon. Member must have come to my room and explained all these points to me. Anyhow, I shall consider them.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த அறிக்கையைப் பற்றி பொதுவாக நான் ஒன்றும் சொல்லப்போவது இல்லை. இந்த இரண்டு அறிக்கைகளையும் சமர்ப்பித்த கமிட்டியின் பதவி காலம் முடிவடைந்து ஒரு புதிய கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஒரு வருஷ காலமாக நல்ல முறையில் இயங்கி வந்த இந்த கமிட்டிக்கு சபையின் சார்பாக பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Report of the Committee of Privileges regarding the definition of the term 'Precincts of the House', laid on the Table on 31st March 1958, be approved."

The motion was put and carried.

VI.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS GENERAL SALES TAX BILL, 1958 (L.A. BILL NO. 6 OF 1958).

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I beg to move—

"That the time appointed for the presentation of the Report of the Select Committee on the Madras General Sales Tax Bill, 1958 (L.A. Bill No. 8 of 1958), be extended till the middle of November 1958."